உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

நாள் :17.11.2025

அ.சா.4 – திலகம் w/o செல்வமணி

S.C. No. 71/2024 :

(சாட்சி மனுவின் பேரில் மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை :

நான் என்னுடைய முதல் விசாரணையில் 108 ஆம்புலன்சிற்கு தகவல் கொடுக்கப்பட்டதாக சொல்லியிருக்கிறேன். யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் எனது மகன் தீபன் சக்கரவர்த்தி தான் 108 ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்தார். என் மகன் தான் 108 ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்த விபரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் தெரியவில்லை. 108 ஆம்புலன்சில் எனது வளர்ப்பு மகன் அ.சா.1 சரவண குகன் மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது உடன் அ.சா.3 ஆன தீபன் சக்கரவர்த்தி மட்டும் தான் உடன் சென்றிருந்தார். என்னுடைய கணவருடன் நானும், கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றிருந்தோம். சண்டை நடந்த அன்றே சென்றிருந்தோம். உண்மையாக சண்டை எதுவும் நடக்கவில்லை என்றும் அவ்வாறுநடந்திருந்தால் சண்டை நடந்த அன்றே காவல்நிலையத்திற்கு சென்றிருப்போம் என்றும் அது பொய் என்பதால் தான் செல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 சரவணகுகனை எங்கள் வீட்டு வாசலில் அரிவாளை கொண்டு தலையில் வெட்டிவிட்டார் அதை நான் முன்பே சொல்லியுள்ளேன். நான் தவறாக சொல்கிறேன் என்றும், மறுநாள் 11.01.2023 அன்று நானும், என் கணவர்செல்வமணியும், என் மகன்கள் சரவணகுகனும், தீபன் சக்கரவர்த்தியும் ஆஜர் எதிரிகள் தோட்டத்திற்கு சென்று கைகலப்பில் ஈடுபட்டோம் என்றும் அதில் அவர்கள் தங்களை பாதுகாத்து கொள்வதற்காக எனது மகனை தள்ளியதில்

சரவணகுகனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளோடு நிலப்பிரச்சினை இருப்பதால் அவர்கள் மீது வீண்பழி சுமத்தி பிரச்சினையில் சிக்க வைக்கவேண்டுமென்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.17 20:57:44 +0530

Assistant Sessions Judge

Melur